ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ விண்ணீல மேலாப்பு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ விண்ணீல மேலாப்பு ॥

## மேகவிடு தூது

‡விண்ணீல மேலாப்பு⋆ விரித்தாற்போல் மேகங்காள்⋆
தெண்ணீர் பாய் வேங்கடத்து⋆ என் திருமாலும் போந்தானே⋆
கண்ணீர்கள் முலைக்குவட்டில்⋆ துளிசோரச் சோர்வேனை⋆
பெண்ணீர்மை ஈடழிக்கும்⋆ இது தமக்கோர் பெருமையே (1)

மா முத்தநிதி சொரியும்⋆ மா முகில்காள்⋆ வேங்கடத்துச்
சாமத்தின் நிறங்கொண்ட⋆ தாளாளன் வார்த்தை என்னே⋆
காமத்தீ உள்புகுந்து⋆ கதுவப்பட்டிடைக் கங்குல்⋆
ஏமத்தோர் தென்றலுக்கு⋆ இங்கிலக்காய் நான் இருப்பேனே (2)

ஒளி வண்ணம் வளை சிந்தை⋆ உறக்கத்தோடிவை எல்லாம்⋆
எளிமையால் இட்டென்னை⋆ ஈடழியப் போயினவால்⋆
குளிர் அருவி வேங்கடத்து⋆ என் கோவிந்தன் குணம் பாடி⋆
அளியத்த மேகங்காள்!⋆ ஆவி காத்திருப்பேனே (3)

மின் ஆகத்தெழுகின்ற⋆ மேகங்காள்⋆ வேங்கடத்துத்-
தன் ஆகத் திருமங்கை⋆ தங்கிய சீர் மார்வற்கு⋆
என் ஆகத்திளங்கொங்கை⋆ விரும்பித் தாம் நாடோறும்⋆
பொன் ஆகம் புல்குதற்கு⋆ என் புரிவுடைமை செப்புமினே (4)

வான் கொண்டு கிளர்ந்தெழுந்த⋆ மா முகில்காள்!⋆ வேங்கடத்துத்-
தேன் கொண்ட மலர் சிதறத்⋆ திரண்டேறிப் பொழிவீர்காள்⋆
ஊன் கொண்ட வள் உகிரால்⋆ இரணியனை உடல் இடந்தான்⋆
தான் கொண்ட சரி வளைகள்⋆ தருமாகில் சாற்றுமினே (5)

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த⋆ தண் முகில்காள்! மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே⋆ நிரந்தேறிப் பொழிவீர்காள்⋆
உலங்குண்ட விளங்கனி போல்⋆ உள் மெலியப் புகுந்து⋆ என்னை
நலங்கொண்ட நாரணற்கு⋆ என் நடலை நோய் செப்புமினே (6)

‡சங்க மா கடல் கடைந்தான்⋆ தண் முகில்காள்!⋆ வேங்கடத்துச்
செங்கண் மால் சேவடிக் கீழ்⋆ அடி வீழ்ச்சி விண்ணப்பம்⋆
கொங்கை மேல் குங்குமத்தின்⋆ குழம்பழியப் புகுந்து⋆ ஒருநாள்
தங்குமேல் என் ஆவி⋆ தங்குமென்றுரையீரே (7)

கார் காலத்தெழுகின்ற⋆ கார்முகில்காள்!⋆ வேங்கடத்துப்-
போர் காலத்தெழுந்தருளிப்⋆ பொருதவனார் பேர் சொல்லி⋆
நீர் காலத் தெருக்கிலம்⋆ பழவிலை போல் வீழ்வேனை⋆
வார் காலத்தொரு நாள்⋆ தம் வாசகம் தந்தருளாரே (8)

‡மத யானை போல் எழுந்த⋆ மா முகில்காள்!⋆ வேங்கடத்தைப்-
பதியாக வாழ்வீர்காள்!⋆ பாம்பணையான் வார்த்தை என்னே⋆
கதி என்றும் தான் ஆவான்⋆ கருதாது⋆ ஓர் பெண் கொடியை
வதை செய்தான் என்னும் சொல்⋆ வையகத்தார் மதியாரே (9)

‡நாகத்தின் அணையானை⋆ நன்னுதலாள் நயந்துரை செய்⋆
மேகத்தை வேங்கடக்கோன்⋆ விடுதூதில் விண்ணப்பம்⋆
போகத்தில் வழுவாத⋆ புதுவையர்கோன் கோதை தமிழ்⋆
ஆகத்து வைத்துரைப்பார்⋆ அவர் அடியார் ஆகுவரே (10)

‖ ஆண்டாள் திருவடிகளே சரணம் ‖